சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 92/2021

பெயர் திருமதி. கல்யாணி **நாள்.** 08.04.2025

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் நிலத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மொத்தம் 1 ஏக்கர் 38 சென்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த 1 ஏக்கர் 38 சென்டிற்கு இன்னும் பாகம் பிரிக்கப்படவில்லை. 8 இன சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். முதல் 5 இன சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். 1 முதல் 5 இன சொத்துக்களை என் கணவரும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்து 3ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி தான் 17, 18 வருடங்களாக அந்த 1 முதல் 5 சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். அந்த சொத்துக்களில் இருந்து வரும் வருமானத்தை எனக்கோ, மற்ற வாதிகளுக்கோ 3ம் பிரதிவாதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். 3ம் பிரதவாதி அந்த சொத்துக்களை தன் சொந்த சொதது்க்களாக அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். அந்த சொத்துக்களை மற்ற பாகஸ்தர்களை நீக்கி 3ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வருவதால் அது அவரது சொந்த சொதது என்றால் சரியல்ல. அதில் நானோ, மற்ற வாதிகளோ பாகம் கோரி இயலாது என்றால் சரியல்ல.

2) வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் 3ம் பிரதிவாதியிடம் பாகம் பிரித்துத் தர கேடகவில்லை. அந்த சொத்துக்களில் 1ம் பிரதிவாதி, சொக்கலிங்கம், முத்துலட்சுமி மற்றும் ஏழுமலை ஆகியோருக்கு தலா 4ல் ஒரு பாகம் என்றாலும், அந்த பாக சொத்துக்களை 3ம் பிரதிவாதி கிரயம் வாங்கிவிட்டார் என்றாலும் சரியல்ல. என் கணவர் 3ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துள்ளதால் எனக்கு சட்டப்படி பாகம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. புல எண். 42/8 0.17.5 ஏர்ஸ் சொத்துக்கள்

பூர்வீக சொததுக்கள் என்றாலும், அதனை நாங்கள் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல. 3ம் பிரதிவாதி வாங்கிய கிரய ஆவணம் சட்டப்படி செல்லும் என்றாலும், அதை நாங்கள் ரத்து செய்ய பரிகாரம் கோர இயலாது என்றாலும் சரியல்ல.

3) ஏழுமலை தன் சுய சம்பாத்தியத்தின் பேரில் சொத்துக்களை கிரயம் வாங்கினார் என்றால் இல்லை. ஏழுமலை பெயரில் சொத்துக்கள் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது. ஏழுமலை யாரிடம் சொத்துக்களை கிரயம் வாங்கியுள்ளார் என்ற விவரமும் எனக்கு தெரியாது. எவ்வளவு ரூபாய்க்கு அவர் கிரயம் வாங்கினார் என்ற விவரமும் தெரியாது. ஏழுமலை சொத்துக்களை கிரயம வாங்கிய அனுபவம் செய்து வந்த விவரம் எனக்கு தெரியாது. வழக்கு 6 முதல் 8 இன சொததுக்களை ஏழுமலை தன் சுய சம்பா்த்தியத்தின்பேரில் கியரம் வாங்கிய சொத்துக்கள் என்றாலும், அதில் நாங்கள் பாகம் கோர இயலாது என்றாலும் சரியல்ல. 2 முதல் 5 பிரதிவாதிகள் தான் ஏழுமலையின் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். வழக்கு 6 முதல் 8 இன சொத்துக்கள் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு உரிமையாது என்றாலும், அதில் நாங்கள் பாகம் கோரி இயலாது என்று சொன்னாலும் சரியல்ல. செய்யூர் நீதிமன்றத்தில் 2 முதல் 5 பிரதிவாதிகள் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவர்கள் பாகம் கோரியும் அந்த வழக்குச் சொத்துக்களில் கட்டிடம் ஏதும் கட்டக்கூடாது என்றும், வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான. அவ்வழக்கு தாக்கல் செய்த பின்பு இவ்வழக்கை நாங்கள் தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. அதனால் நாங்கள் கோரியவாறு வழக்குச் சொத்துக்களில் பாகம் கோர இயலாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை